<u>மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்போரூர்</u>

**DEPOSITION OF WITNESSES**

(Chapter XXIII Cr.P.C)

**CC NO. 89/2023**

**PW. 1**

**Date: 06.05.2026**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | நாகலிங்கம் | வயது | 54 |
| கணவர்/தந்தை பெயர் | சிங்காரம் | தொழில் | – |
| கிராமம் | கண்ணகபட்டு | வட்டம் | திருப்போரூர் |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act 1969, (Central Act 44 of 1969) on the **06th May 2026**

சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.

1, 3 முதல் 7 எதிரிகள் ஆஜர். 2 ஆம் எதிரி ஆஜர் இல்லை. கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்.

<u>முதல் விசாரணை :</u>

1. நான் திருப்போரூர் கண்ணகபட்டு பகுதியில் ஒரு இடம் வாங்கினேன். அதில் ஆஜர் எதிரிகள் இடையூறு செய்து வந்தனர். கடந்த 15/07/2022 அன்று எதிரிகள் ஆயுதங்களுடன் வந்த என்னை ஆபசமாக திட்டி அங்கு இருந்து சென்று விடும்படி கொலை மிரட்டல் விடுத்தார்கள். அங்கு வைக்கப்பட்டு இருந்த கட்டுமான பொருட்களையும் எடுத்து சென்று விட்டார்க்ள். அது சம்பந்தமாக கடந்த 15/07/2022 அன்று திருப்போரூர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தோம். போலிசார் நடவடிக்கை

எடுக்கததால் இத்தனி நபர் புகாரை தாக்கல் செய்தேன். எனவே எதிரிகள் மீது உரிய நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

<u>**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**</u>

2. நான் சாட்சியம் அளித்ததுபோன்று எவ்வித சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும் எங்களுக்கும் எதிரிகளுக்கும் இடையே உரிமையியல் வழக்கு மட்டும் தான் நிலுவையில் இருந்து வருகிறது என்றாலும் எதிரிகள் என்னை ஆபாசமாக திட்டவோ தாக்கவோ கொலை மிரட்டல் விடுக்கவோ இல்லை என்றாலும் நான் சாட்சியம் அளித்தது போன்று எந்த பொருட்களையும் திருடவில்லை என்றாலும் சரியல்ல.

<u>**மறுவிசாரணை**</u> – இல்லை

NILAVARASAN KASI Digitally signed by NILAVARASAN KASI

District Munsif cum Judicial Magistrate,
Thiruporur.